பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 ஐப்பசி 02 புதன்கிழமை 19.10.2022 கதிர் 346

### இது ரகசியம் அல்ல!

தெற்குக் கடலில் ஆறு கடற்படையினருடன் காணாமல் போனதாகக் கூறப்பட்ட கடற்படையினரின் படகிலிருந்து சரியாக ஒரு மாதத்தின் பின்னர் இப்போது தொடர்பு கிடைத்துள்ளதாகவும், அவர்கள் இன்று மீட்கப்பட்டு ☞2

# கடலட்டை பண்ணைகளுக்கு இங்கு இடமளிக்கமாட்டோம்!

## வடக்கு மீனவர்கள் திட்டவட்டம்

(ந.லோகதயாளன், இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம், ஒக்.19

எங்களைக்கொன்றாலும் பரவாயில்லை,எங்கள்உயிர் இருக்கும் வரை எமது கடல் பகுதியில் நெக்டா நிறுவனத்தின் அனுமதியோடு சட்ட விரோதமாக இடம்பெறும் கடலட்டைப் பண்ணைகளுக்கு எதிராகக் குரல் கொடுப்போம் என யாழ் மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசங்களின் சம்மேளனத் தலைவர் அ.அன்னராசா தெரிவித்தார். ☞11




## கூட்டணிக்குள் குழப்பமா? இல்லை என்கிறார் மனோ!

### சாப்டர் சுயமாகவே பதவி விலகுகிறாராம்




தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பொதுச்செயலாளர் சந்திரா சாப்டர் வயது மூப்பின் காரணமாகப் பொதுச்செயலாளர் பதவியிலிருந்து சுயமாக விலகியுள்ளார் என்று கூட்டணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார். ☞2

## உள்ளூராட்சித் தேர்தல் பெப்ரவரி பிற்பகுதியில்!

### தேர்தல் ஆணையம் முடிவாம்

கொழும்பு,ஒக்.19

எதிர்வரும் வருடம் மார்ச் 20ஆம் திகதிக்கு குறைந்தபட்சம் இரண்டு வாரங்களுக்கு முன்னதாக உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது. ☞11

## தேர்தல்களைப் பிற்போட மொட்டுக் கட்சி விடாதாம்

தேர்தல்களை பிற்போட உடன்படப்போவதில்லை என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இந்த விடயத்தைக் ☞11

## திருநெல்வேலியில் நேற்றுக் கவனவீர்ப்பு




(இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம்,ஒக்.19

போதைப்பொருள் பாவனைக்கு எதிராக நேற்று காலை திருநெல்வேலி பொதுச்சந்தை முன்பாக கவனவீர்ப்பு முன்னெடுக்கப்பட்டது. ☞11

## முல்லைத்தீவு ஆக்கிரமிப்பு முயற்சி தடுத்து நிறுத்தம்!

முல்லைத்தீவு மாவட்டத்தின் சில பகுதிகளை மகாவலி எல் வலயத்துடன் இணைப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கடுமையான ஆட்சேபனையை தொடர்ந்து ஜனாதிபதியினால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

ஈ.பி.டி.பி. வட்டாரங்கள் இத்தகவலைத் தெரிவித்தன.

முல்லைத்தீவில் கொக்குளாய், கொக்குத்தொடுவாய் போன்ற பிரதேசங்களை சேர்ந்த சுமார் 6 கிராம சேவகர் பிரிவுகளை மகாவலி எல் வலயத்துடன் ☞11

## மாந்தை மேற்கில் வயோதிபர் பஸ்ஸுடன் மோதுண்டு சாவு!



மன்னார் - மாந்தை மேற்கு பிரதேச செயலகம் அருகில் நேற்று மாலை வீதியில் நின்று கொண்டிருந்த முதியவர் மீது பஸ் மோதியதில் சாத்தான்குளம் பகுதியை சேர்ந்த 74 வயதான ஒருவர் உயிரிழந்துள்ளார்.

விபத்தின் போது பலத்த காயமடைந்த வயோதிபர் வைத்தியசாலைக்கு கொண்டு சென்றதன் பின்னர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

பஸ்ஸின் சாரதியும் நடத்துனரும் ☞11



## தும்பிக்கை துண்டாடப்பட்ட நிலையில் யானையின் உடலம் மாந்தை கிழக்கில்!

முல்லைத்தீவு - மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட மூன்று முறிப்பு இயற்கை ஒதுக்கிடத்தின் ஐயம்பெருமாள் பிரதேசத்தின் காட்டுப் பகுதியில் இருபத்தைந்து வயது மதிக்கதக்க ஏழு அடி உயரமான ஆண் யானை ஒன்று தும்பிக்கை வெட்டப்பட்ட நிலையில் வனஜீவராசிகள் ☞11

## சித்த மருத்துவ கற்கை நெறி யாழ் பல்கலையில் தொடரும்

### பிடுங்கும் முயற்சி டக்ளஸால் முறியடிப்பு



சுதேச மருத்துவ திருத்த சட்ட மூலங்களுக்கு ஆட்சேபனை தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா யாழ் மற்றும் கிழக்கு பல்கலைக்கழகங்களின் கீழ் செயற்பட்டு வருகின்ற சுதேச மருத்துவ கற்கைநெறிகள் ☞11

## அமைச்சுப் பதவி இழுபறி நீடிப்பு!

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவினால் முன்மொழியப்பட்ட நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அமைச்சுப் பதவிகளை வழங்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீண்டும் மறுப்பு ☞11

## யாழ்., கிழக்குப் பல்கலைகளின் மாணவர்கள் சேர்ந்து அமைப்பு!



யாழ் பல்கலைக்கழகமும் கிழக்கு பல்கலைக்கழகமும் இணைந்து வடகிழக்கு பல்கலைக்கழக தமிழ் மாணவர் ஒன்றியம் எனும் அமைப்பு கிழக்கு பல்கலைக்கழகத்தில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டுள்ளது. ☞11

## நெடுங்கேணியில் துப்பாக்கிச் சூடு: 21 வயது யுவதி பலி

வவுனியா, நெடுங்கேணி பகுதியில் நேற்று இரவு இடம்பெற்ற துப்பாக்கி சூட்டு சம்பவத்தில் 21 வயது யுவதி ஒருவர் மரணமடைந்துள்ளார் என நெடுங்கேணி பொலிஸார் தெரிவித்தனர். ☞11

## கொக்கெய்னுடன் யுவதி சிக்கினார்!

சுமார் 13 கோடி ரூபா பெறுமதியான இரண்டு கிலோ 553 கிராம் கொக்கெய்னுடன் 26 வயதான பெண் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் ☞11

## இனி இது ......................

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கரைக்குக் கொண்டுவரப்படுவார்கள் என்றும் பாதுகாப்பு வட்டாரங்களில் தகவல் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

எனினும் அது தொடர்பில் பலத்த சந்தேகங்களும் திரை மறைவுப் பேச்சுக்களும் இப்பொழுது ஆரம்பித்து விட்டன.

இவர்கள் கடற்படையில் பணியிலிருந்த சமயம், கடற்படைப் படகைப் பயன்படுத்தி நாட்டை விட்டு சட்டவிரோதமாகத் தப்பி ஓட முயற்சித்தவர்கள் என்ற கதையை மூடி மறைக்கும் எத்தனங்கள் நடப்பதாகவும் பேச்சடிபடுகின்றது.

இந்த ஆறு பேரும் பயணித்தது கடற்படையின் உத்தியோகபூர்வ படகு அல்ல, தனியார் படகு போன்ற ஒன்றை கடற்படை தனது பாவனைக்கு வைத்திருந்தது. அந்தப் படகில் வெளிப்படைக்கு அது இலங்கைக் கடற்படையின் உத்தியோக பூர்வ பாவனைக்குரியது என்பதைக் குறிக்கும் அறிவிப்பு ஏதும் இல்லை என்பது கவனிக்கத்தக்கது.

கடந்த மாதம் 17 ஆம் திகதியிலிருந்து இந்தப் படகும், அதிலிருந்து ஆறு கடற்படையினரும் மிஸ்ஸிங். ஆனால் பகிரங்க அறிவிப்பு ஏதும் வெளிவரவில்லை. விடயம் அமுக்கி வாசிக்கப்பட்டது.

முதன் முதலில் 'காலைக்கதிர்'தான் படகு காணாமல் போய் 18 நாள்களுக்கும் பின்னர் முதலில் செய்தியை - தகவலை - வெளியிட்டது. கடற்படையினர் ஆறு பேரும் அந்தப் படகில் சர்வதேசக் கடல் எல்லையைத் தாண்டி, வேறு நாடு ஒன்றுக்குத் தப்பி ஓடினர் என்று பேசப்படுகின்றது எனும் தகவலைத் தர 'காலைக்கதிர்' தவறவில்லை.

'காலைக்கதிர்' செய்தி வெளியாகி சுமார் பத்து நாள்களுக்குப் பின்னர்தான் - படகு காணாமல் போய் நாலாம் வாரத்தில்தான் - அப்படி படகு ஆறு கடற்படையினருடன் காணாமல் போனது என்ற தகவலை இலங்கைப் பாதுகாப்பு தரப்பு முதன் முதலில் வெளிப்படையாக ஒப்புக் கொண்டது.

இப்போது, படகு காணாமல் போய் ஒரு மாதத்தின் பின்னர், படகின் தொடர்பு கிடைத்துவிட்டது, படகு இன்று மீட்கப்படும் என்றெல்லாம் செய்திகள் வெளியிடப்படுகின்றன.

சாதாரண கடலோரக் கண்காணிப்பு பயணத்தில் அவர்கள் புறப்பட்டு இருந்தால், உணவு, தண்ணீர் இல்லாமல் அந்தப் படகில் இருந்தோர் ஒரு மாதத்திற்கு மேல் எப்படித் தாக்குப் பிடித்தனர், உயிர் பிழைத்தனர் என்பது கேள்விக்குறிதான்.

அந்தப் படகில் இருந்தோர் சட்ட விரோதக் குடியேறிகளாக முயற்சித்து, ஒரு கடற்பிரதேசத்துக்குள் வைத்து அந்த நாட்டின் கரையோரக் கடற்படையால் மடக்கப்பட்டுள்ளனர் என்றும், இலங்கைப் பாதுகாப்பு தரப்பு அந்த நாட்டுடன் உரையாடியமையை அடுத்து படகோடு அறுவரும் அந்த நாட்டுப் படைகளால் சர்வ தேச கடற்பரப்பில் வைத்து இலங்கை கடற்படையிடம் ஒப்படைக்கப் படுகின்றனர் என்றும், இலங்கை கடற்படையினர் அவர்களைப் பொறுப்பேற்று, இன்று கல்முனை கடல்பகுதிக்கு அழைத்து வருவர் என்றும் இன்னொரு செய்தி கூறுகிறது.

இந்த ஆறு கடற்படையினரும் நாட்டை விட்டு சட்டவிரோதமாக தப்பி ஓடியவர்கள் என்பது உண்மையா அல்லது அவர்கள் படகு பழுதானமையால் ஒரு மாதம் சர்வதேசக் கடலில் அலைந்த பின்னர் மீட்கப்பட்டவர்கள் என்பது உண்மையா என்ற விடயத்தை அந்த அறுவரும் கரைக்குத் திரும்பியதும் நடக்கப் போகும் விடயங்கள் உறுதி செய்யும்.

அறுவரும் உரிய மருத்துவ சோதனைகளின் பின்னர் தத்தமது வீடுகளுக்கு மீண்டார்கள் எனில் அவர்களின் படகு செயலிழந்துதான் போயிற்று என்ற பேச்சு உண்மையாகிவிடும்.

மாறாக அவர்கள் தடுப்பு காவலில் வைக்கப்படுவார்கள் எனின், கடந்த ஐந்தாம் திகதி 'காலைக்கதிர்' வெளியிட்ட நாட்டை விட்டு தப்பி ஓட்டம் என்ற ஊகச் செய்தி உண்மையாகிவிடும்.

இந்த ஆறு கடற்படையினரும் இன்று கரைக்குத் திரும்பியதும் எல்லோராலும் உன்னிப்பாகக் கவனிக்கப்படுவார்கள் என்பது நிச்சயம்.

- மின்னல் -

## கூட்டணிக்குள் குழப்பமா?...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தமிழ் முற்போக்குக் கூட்டணியின் நிலைபேறு மற்றும் வளர்ச்சிக்குக் கணிசமாகப் பங்களித்துள்ள சாப்டரின் இடைவிலகலை நாம் கனத்த இதயத்துடன் புரிந்துகொள்கின்றோம் என்றும் மனோ கணேசன் கூறியுள்ளார்.

கூட்டணியின் அரசியல் குழு விரைவில் கூடி, கூட்டணி யாப்புக்கு இணங்க புதிய பொதுச்செயலாளரைத் தெரிவு செய்யும் என்றும் மனோ கணேசன் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, தமிழ் முற்போக்குக் கூட்டணி இரண்டாகப் பிளவுபடும் அபாயத்தை எதிர்கொண்டுள்ளது என்று நேற்றுக் காலை முதல் ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன.

இதன் ஓர் அங்கமாக கூட்டணியின் பொதுச்செயலாளர் பதவியில் இருந்து சந்திரா சாப்டர் விலகுகின்றார் என்றும், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைமைப் பீடத்தின் தன்னிச்சையான செயற்பாடு காரணமாகவே பொதுச்செயலாளர் இந்த முடிவை எடுத்துள்ளார் என்றும் அந்தச் செய்திகளில் குறிப்பிடப்பட்டிருந்தன.

இந்தநிலையிலேயே தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், கூட்டணியின் பொதுச்செயலாளர் சந்திரா சாப்டர் வயது மூப்பின் காரணமாகப் பொதுச்செயலாளர் பதவியிலிருந்து சுயமாக விலகியுள்ளார் என்று நேற்றிரவு ஊடகங்களிடம் அறிவித்துள்ளார்.

**மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்**

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மண மக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள **076 443 8619** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை – அதிகாலையும் மாலையும் – உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.






V2 Travels and Tours

V2 TRAVELS இன் ஊடாக பதிந்து அமெரிக்கா சென்றவர்களின் விசா வென்ற வெற்றிக்கதைகளை எமது V2 Travels and Tours என்ற Facebook பக்கத்தில் பார்வையிடலாம்.

இந்த அதிஸ்டத்தினை நீங்களும் பயன்படுத்துங்கள். மற்றவர்களுக்கும் பகிருங்கள். இதன்மூலம் நீங்களோ உங்கள் அன்புக்குரிய நண்பர்கள்,உறவினர்கள் என அனைவரும் உங்கள்மூலமாக இந்த அதிஸ்டத்தினை பெற இந்த தகவலினை பகிருங்கள்.

# அமெரிக்க லொத்தர் விசா

## நீங்களும் அமெரிக்காவில் குடும்பத்துடன் வாழலாம்...

ஒரு உறுதியான முடிவு உங்கள் வாழ்க்கையை மாற்றிவிடும்!

VISA

அலுவலர்களின் நன்மை கருதி சனி, ஞாயிறு உட்பட இரவு 7 மணிவரை பதிவுகள் மேற்கொள்ளப்படும்

மிக மிக அரிய சந்தர்ப்பம் தவறவே விடாதீர்கள்

அலட்சியம் வேண்டாம்

கடந்த காலங்களில் வாய்ப்புக்களை தவறவிட்டு விண்ணப்பிக்காதவர்கள் அப்படியே இருக்க **நம்பிக்கையுடன்** எம்மூடாக விண்ணப்பித்தவர்கள் விசா பெற்று அமெரிக்கா சென்றுவிட்டார்கள்.

நீங்கள் கூட அதிஸ்டசாலியாகலாம்

ஆச்சரியம்! ஆனால் உண்மை.

18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்

## அனைவருக்குமான இலவச சந்தர்ப்பம்

திருமணமானவர்களுக்கு ஒரே நேரத்தில் இரண்டு வாய்ப்புக்கள்

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற ஓர் அரிய சந்தர்ப்பம்

படித்தவர்கள், பட்டதாரிகள், அரச வேலை செய்பவர்கள், தனியார் துறையில் வேலை செய்பவர்கள், வேலையில்லா பட்டதாரிகள், A/L பரீட்சை எடுக்கும் மாணவர்கள், வெளிநாட்டில் படிக்க விரும்பும் மாணவர்கள் அனைவருக்கும் இது அரிய இறுதி சந்தர்ப்பமாகும். பயன்படுத்துங்கள்! பலன் பெறுங்கள்!

240 இதுவரை எம்மூடாக விண்ணப்பித்தவர்களுள் பேருக்கு மேல் அமெரிக்காவில் வாழ்கின்றார்கள்.

## இளைஞர்களே, யுவதிகளே வெளிநாடு செல்ல காசில்லையா?

இலட்சக்கணக்கான காசை கொடுத்து ஏமாறுவதற்கு பதில் இலவசமாக கிடைக்கும் 55'000 பேருக்கான அதிஸ்ட வாய்ப்பை தவறவிடுவானேன்?

Love You

உங்களுக்கு விசா கிடைத்தால் உங்களுடன் சேர்த்து உங்கள் (காதலன்/காதலி) எதிர்கால வாழ்க்கைத்துணையையும் அழைத்துச்செல்லலாம்

# 0768226244
# 0768226240

நீங்கள் தவறவிடும் ஒவ்வொரு கணமும் இன்னொருவருக்கான விசா வாய்ப்பாக அமையும்

## பதிவுகளுக்கு Passport தேவையில்லை

முக்கிய அறிவித்தல்

ஒருவிதத்தில் நாம் அனைவரும் அதிஷ்டசாலிகள்தான் கடந்த வருடங்களில் கட்டாயமாக்கப்பட்ட பாஸ்போட் நடைமுறை இந்த வருடம் தளர்த்தப்பட்டுள்ளது.இதன்மூலம் இலங்கையில் உள்ள மக்கள் அனைவரும் பாஸ்போட் இல்லாமலேயே விசா வாய்ப்பினை பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி - 08-11-2022

EMERGENCY ALERT சிந்தியுங்கள்!!! உடனடியாக பதிவுசெய்யுங்கள்!

கடைசி 7 நாட்களும் உலகம் முழுவதிலுமிருந்து அதிக விண்ணப்பங்கள் போடப்படுவதால் அமெரிக்க லொத்தர் இணையமானது அடிக்கடி முடங்குவதால் இறுதிக்கட்ட ஏமாற்றங்களை தவிர்க்க, முடிந்தளவுக்கு முன்னரே பதியுங்கள்.

## பதிவுகள் நடைபெறும் எமது கிளைகள்-விபரங்களுக்கு அழையுங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | -0777068777 | திருகோணமலை | - 0768226237 | கிளிநொச்சி | -0768226240 |
| நெல்லியடி | -0776699892 | கொடிகாமம் | - 0764550675 | சாவகச்சேரி | -0768226242 |
| புதுக்குடியிருப்பு | -0764550673 | சுன்னாகம் | - 0764550670 | மானிப்பாய் | -0768226238 |
| கோப்பாய் - | -0768226238 | புத்தூர் | - 0764550671 | பருத்தித்துறை | -0768226230 |
| வல்வெட்டித்துறை | -0776697960 | பண்டத்தரிப்பு | - 0777718322 | சங்கானை | -0777726322 |

கொழும்பு (வெள்ளவத்தை) - 0777469777

வெளிமாவட்டங்கள்- 0768226236

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ரணில் போதிக்கப் போகும் பாடம்

ஆளும் கட்சி – எதிர்க்கட்சித் தரப்புகளுக்கு உள்ளேயும் பெரும் குழப்பங்களை ஏற்படுத்தியிருக்கும் 22 ஆவது அரசமைப்பு திருத்த சட்டமூலம் நாளை நாடாளுமன்றுக்கு வருகின்றது.

நாளையும் மறுதினமும் அதன் மீது விவாதம் நடக்கும். முடிவில் வாக்கெடுப்பு. திருத்தத்திற்கு மூன்றில் இரண்டு பங்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் – 150 எம்.பிக்கள் – ஆதரவளித்தால்தான் திருத்தம் அரசமைப்புச் சட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படும்.

இந்தத் திருத்தத்தை கொண்டு வரும் அரசு தரப்புக்குள்ளேயே இது தொடர்பில் இழுபறி, முரண்பாடு நீடிக்கின்றது.

இரட்டைப் பிரஜாவுரிமை கொண்டோர் பொதுத் தேர்தல் போன்றவற்றில் நிற்க முடியாது என்ற பழைய 19 ஆவது அரசமைப்புத் திருத்த ஏற்பாட்டை இந்த 22 ஆவது திருத்தச் சட்ட மூலமும் கொண்டிருப்பதால், ஆளும் பொதுஜனப் பெரமுன கட்சியின் கணிசமான எம்.பிக்கள் இத்திருத்தத்தை ஆதரிக்க மறுக்கின்றனர்.

பஸில் ராஜபக்ஷ போன்ற இரட்டைப் பிரஜாவுரிமைப் பிரமுகர்களின் அரசியல் எதிர்காலத்தை இந்தத் திருத்தம் அடியோடு அடைத்து விடும் என்பதால் அரசுக்குள் பஸிலின் ஆதரவாளர்கள் இந்தத் திருத்தத்தை எதிர்க்கின்றனர்.

அமெரிக்காவில் தங்கியிருக்கும் பஸில் ராஜபக்ஷவே அங்கிருந்தபடி 22 ஆவது திருத்தத்திற்கு எதிரான குழுவை அரசுக்குள் பலமாக இயக்குகின்றார் என்றும் கூறப்படுகின்றது.

ஆளும் தரப்பினர் பிகு பண்ணினால், எதிர்க்கட்சிகளின் ஆதரவோடு தேவையான மூன்றிலிரண்டு பங்கு எம்.பிக்களின் ஒத்துழைப்பைச் சுவீகரிக்கும் முயற்சியில் ரணில் தலைமையிலான அரசுத் தரப்பு ஈடுபட்டிருப்பதாக தெரிகின்றது.

சரியோ, பிழையோ இந்த 22 ஆவது அரசமைப்பு திருத்தம் ஜனாதிபதியின் நிறைவேற்றதிகாரங்களை வெட்டிக் குறைக்கின்றது என்பது மட்டும் உண்மை. அது போதுமானதா, திருப்திகரமானதா என்பவற்றுக்கு அப்பால், அது ஜனாதிபதியின் ஏதோ அதிகாரங்களை வெட்டிக் குறைப்பதால், திருத்தத்தை எதிர்க்கட்சிகள் எக்காரணம் கொண்டும் எதிர்க்காமல் ஆதரித்தேயாக வேண்டும் என்ற கட்டாயக் கடப்பாடு உள்ளது என்றும் சுட்டிக் காட்டப்படுகின்றது.

இந்தப் பின்புலத்தில்தான், இந்தத் திருத்தத்தை நிராகரிக்கிறோம், ஆதரிக்க மாட்டோம் என்று முன்னர் ஒரேயடியாக வெட்டு ஒன்று துண்டு இரண்டாகக் கூறிய எதிரணி, இப்போது இந்த 22 ஆவது அரசமைப்புத் திருத்தப் பிரேரணையை ஆதரிப்பது குறித்து மீள்பரிசீலித்து முடிவெடுக்கத் தீர்மானித்துள்ளது.

இதற்காக எதிர்க்கட்சிகளின் ஒரு முக்கிய மந்திராலோசனைக் கூட்டத்தை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸா இன்று கொழும்பில் கூட்டியிருக்கின்றார்.

சில நியாயமான நிபந்தனைகளோடு அரசமைப்புத் திருத்தச் சட்டத்தை ஆதரிக்க எதிர்க்கட்சிகள் இணங்கும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

அப்படி நேர்ந்தால், ஆளும் கட்சியினரில் கணிசமானோரின் எதிர்ப்புக்கு மத்தியிலும் இந்த அரசமைப்புத் திருத்தத்தை போதிய மூன்றில் இரண்டு பங்கு எம்.பிக்களின் ஆதரவுடன் நிறைவேற்றி, அந்த எதிர்பாளர்களுக்கு ஜனாதிபதி ரணில் ஒரு பாடம் படிப்பிக்கக் கூடும்.

# சகல பல்கலை மாணவர் ஒன்றியத்தின் ஆர்ப்பாட்டம்!

### உன்னிப்பாக அவதானிப்பதாக ஐ.நா. தெரிவிப்பு




அனைத்து பல்கலைகழக மாணவர் ஒன்றியம் ஏற்பாடு செய்துள்ள ஆர்ப்பாட்டத்தை உன்னிப்பாக அவதானிக் கப்போவதாக தெரிவித்துள்ள ஒன்றுகூடுவதற்கான சுதந்திரத்துக்கான ஐ.நாவின் விசேட அறிக்கையாளர் கிளமெண்ட் வூலே அமைதியாக ஒன்று கூடுவதற்கான சுதந்திரத்தை வலியுறுத்தியுள்ளார்.

அனைத்து பல்கலை கழக மாணவர் ஒன்றியம் ஆர்ப்பாட்டங்களுக்கு ஏற்பாடு செய்துள்ள நிலையில் இலங்கை அரசாங்கம் அமைதியாக ஒன்றுகூடுவதற்கான உரிமையை மதிக்கவேண்டும் என வலியுறுத்துகின்றேன் என்று அவர் தெரிவித்துள்ளார்.

ஆர்ப்பாட்டக்காரர்களை பாதுகாக்க வேண்டிய அனைவரும் தங்கள் கருத்தை வெளிப்படுத்துவதற்கான பாதுகாப்பான சூழலை ஏற்ப டுத்தவேண்டிய கடப்பாடு சட்ட அமுலாக்கல் அதிகாரிகளுக்கு உள்ளது என ஐ.நாவின் விசேட அறிக்கையாளர் தெரிவித்துள்ளார்.

நிலைமையை நான் உன்னிப்பாக அவதானிப்பேன் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்த நடவடிக்கைகள்

### யாழ் மாவட்ட இந்து கலாசார பேரவை




யாழ்ப்பாண மாவட்டத்தில் அதிகரித்துள்ள போதைப்பொருள் பாவனை கட்டுப்படுத்துவதற்கு பொலிஸார் இணைந்து நடவடிக்கைகளை முன்னெடுக்க உள்ளனர் என யாழ். மாவட்ட இந்து கலாசார பேரவையின் செயலாளர் எம்.ரி.எஸ். இராமச்சந்திரன் தெரிவித்தார். யாழ்ப்பாண ஊடக மன்றத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது அவர் இதனைக் குறிப்பிட்டார்.

வெளிநாட்டு வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொள்வதற்காக தனது கல்வி நிலையத்தில் 23 ஆயிரம் வரையானவர்கள் வெளிநாட்டு மொழியை கற்று நாட்டின் பல பகுதிகளில் வாழ்ந்து வருகின்றனர்.

குறிப்பாக யாழ் மாவட்டத்திலுள்ள அதிக வசதி வாய்ப்பு படைத்த இளைஞர்கள் வெளிநாட்டு போதை பொருள்களை பயன்படுத்தி தம்மையும் தமது கலாசாரத்தையும் அழித்து வருகின்றனர்.

எனவே இந்த விடயம் தொடர்பில் வடக்கு மாகாண பிரதி பொலிஸ் மா அதிபர், வடக்கு மாகாண ஆளுநர், இராணுவ தலைமை அதிகாரி உள்ளிட்டோர் தமது கல்வி நிலையங்கள் ஊடாக கருத்தமர்வுகளை ஏற்படுத்துவதன் மூலம் போதைப் பொருள் பாவனையை யாழ். மாவட்டத்தில் கட்டுப்படுத்த முடியும் என்றும் இதன்போது குறிப்பிட்டார்.

அத்துடன் போதைப் பொருளை ஒழிப்பதற்கான செயல்திட்ட கருத்தரங்கு களையும் இளைஞர், யுவதிகள் மத்தியில் எதிர்காலத்தில் மேற்கொள்வதற்கு திட்டமிட்டுள்ளதாகவும் இதனை கருத்தில் கொண்டு அனைவரும் போதையற்ற நாட்டை உருவாக்க முன்வர வேண்டும் என்றும் இதன் போது கேட்டுக் கொண்டார்.

# திருகோணமலை எண்ணெய் தாங்கிகளை இந்தியாவுக்கு வழங்கியிருந்தால் எரிபொருள் பிரச்சினை ஏற்பட்டிருக்காது

### சட்டத்தரணி சஞ்ஜீவ செனவிரத்ன தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 19

திருகோணமலை எண்ணெய்த் தாங்கிகளை இந்தியாவுக்கு வழங்கும் ஒப்பந்தத்தை நடைமுறைப்படுதி இருந்தால் நாடு தற்போது எதிர்கொண்டுள்ள எரிபொருள் பிரச்சினை ஏற்பட்டிருக்காது. எதிர்ப்பு அரசியல் காரண மாகவே எமது நாடு அபிவிருத்தி அடையாமல் இருந்து வருகின்றது. அதனால் மாறுபடாத தேசிய பொருளாதாரக் கொள்கை ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என ஐக்கிய தேசிய கட்சி அநுராதபுர தொகுதி அமைப்பாளர் சட்டத்தரணி சஞ்ஜீவ செனவிரத்ன தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வேலைத் திட்டங்கள் 2048 ஆம் ஆண்டை இலக்குவைத்தே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறிப்பாக உணவு பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுத்து வருகின்றார். அதன் ஒரு கட்டமாகவே கடந்த வாரம் ஜனாதிபதி திருகோணமலை மாவட்டத்துக்கு சென்று அங்கு மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக ஆராய்ந்திருந்தார்.

விவசாய நடவடிக்கையை மேற்கொள்வதற்குத் தேவையான வசதிகளை பெற்றுக்கொடுக்கவும் நடவடிக்கை எடுத்திருக்கின்றார்.

ஏனெனில் உலக உணவுப் பாதுகாப்புத் திட்டத்தில் உலகில் எமது நாடு 79 ஆவது இடத்திலேயே இருக்கின்றது. விவசாயத்துக்குத் தேவையான சகல வசதிகளும் இருக்கும் நிலையில் எமது நாடு இந்தளவு பின்தள்ளப்பட்டிருப்பது கவலைக்குரிய விடயமாகும்.

2048 ஆகும் போது உகல சனத் தொகை அதிகரிப்புக்குத் தேவையான உணவு போதாமல் போகும் அபாயம் இருக்கின்றது. அதனாலே தற்போதில் இருந்து உணவு பாதுகாப்பை ஏற்படுத்துவதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுத்து வருகின்றார்.

அத்துடன் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப நாட்டின் வளங்களை வெளி நாடுகளுடன் இணைந்து அபிவிருத்தி செய்யவும் ஜனாதிபதி நடவடிக்கை எடுத்து வருகின்றார்.

2003 இல் ஐக்கிய தேசிய கட்சி அரசாங் கத்தின் போது திருகோணமலை எண்ணெய் தாங்கிகளை இந்தியாவுடன் இணைந்து அபிவிருத்தி செய்ய ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டபோது, எதிர்க்கட்சிகள் அதற்குக் கடும் எதிர்ப்பு தெரிவித்து அந்த நடவடிக்கையை மேற்கொள்ள இடமளிக்கவில்லை.

நாங்கள் ஒப்பந்தம் செய்தவாறு திருகோணமலை எண்ணெய்த் தாங்கிகளை இந்தியாவுக்கு வழங்கி இருந்தால், நாடு இன்று எதிர்கொண்டுள்ள எரிபொருள் பிரச்சினை ஏற்பட்டிருக்காது.

அரசியல்வாதிகளின் எதிர்ப்பு அரசியல் கலாசாரம் காரணமாகவே எமது நாடு இன்னும் அபிவிருத்தி அடைய முடியாமல் இருக்கின்றது.

அதேபோன்று 1987 இல் கல்வி மறுசீரமைப்பு மேற்காணெடு இலவச கல்வியை மேற்கொள்ளும் போது அன்று எதிர்ப்பு தெரிவித்தவர்களின் பிள்ளைகள் இன்று இலவச கல்வியைப் பெற்றுக் கொண்டு வெளிநாடுகளுக்கு சென்று வருகின்றனர். எந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும் பொருளாதாரம் மற்றும் கல்வியில் குறிப்பிட்டதொரு காலத்துக்கு மாறுபடாத தேசிய கொள்கை ஏற்படுத்தப்படவேண்டும். அதன் மூலமே நாட்டை அபிவிருத்தி செய்ய முடியும். – என்றார்.

# தேசிய ரீதியில் சிறந்த இளம் புத்தாக்குநராக வேம்படி மகளிர் கல்லூரி மாணவி தெரிவானார்!

வளர்முக நாடுகளின் பெண்களுக்கான விஞ்ஞான அமைப்பின் இலங்கைக் கிளையும், ஸ்ரீ ஜெவர்த்தனபுரப் பல்கலைக் கழகத்தின் பிறப்புரிமையியல் மற்றும் மூலக்கூற்று உயிரியல்த் துறையும் இணைந்து தேசிய ரீதியில் மாணவருக்கான புத்தாக்கப் போட்டி ஒன்றை நடத்தியிருந்தது.

இதில் 2022 ஆம் ஆண்டிற்கான சிறந்த பெண் பாடலை மாணவ இளம் புத்தாக்குநராக வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை மாணவி மதுரா அருந்தவம் தெரிவு செய்யப்பட்டார்.

சிறந்த பெண் புத்தாக்குநருக்கான பதக்கத்தை ஸ்ரீ ஜெயவர்த்தனப் பல்கலைக்கழகத் துணை வேந்தர் பேராசிரியர் சித்தானந்த லியநஹே அணிவித்தமைடன், இவருக்கான சான்றிதழை வளர்முக நாடுகளுக்கான பெண்களுக்கான விஞ்ஞான அமைப்பின் தலைவி பேராசிரியர் சுகந்திக்கா சுரேஷ் வழங்கினார்.

இந்த நிகழ்வு அன்மையில் ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக் கழகத்தின் மூதவை மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.





# மோட்டார் சைக்கிளை அடகுபிடித்து யாழில் போதைப்பொருள் விற்பனை!

## மூவர் கைது

கொழும்பு, ஒக். 19

போதைப்பொருள் வாங்க வருவோரிடம் பணம் இல்லாத போது அவர்களின் மோட்டார் சைக்கிள்கள், கையடக்கத் தொலைபேசிகள் என்பவற்றை அடகுபிடித்துக் கொண்டு போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட போதைப்பொருள் வியாபாரிகள் எனும் சந்தேகத்தில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் பொம்மைவெளி பகுதியில் போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபடும் வியாபாரிகள் தொடர்பிலான இரகசிய தகவல் மாவட்ட குற்றத்தடுப்பு புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கபெற்றமையை அடுத்து அந்த இடத்துக்கு விரைந்த புலனாய்வு பிரிவினர் மூன்று சந்தேக நபர்களை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து 2 கிராம் 270 மில்லி கிராம் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது.

அதேவேளை,அவர்களிடம் போதைப்பொருளை வாங்கவருவோர் பண பற்றாக்குறை ஏற்பட்டால், தமது கையடக்க தொலைபேசிகள், மோட்டார் சைக்கிள் என்பவற்றை அடகாகவைத்து போதை பொருளை வாங்கி செல்வார்கள் என பொலிஸ் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

அதன் அடிப்படையில் போதைப்பொருள் வாங்குவதற்காக சந்தேக நபர்களிடம் அடகாக ஒப்படைக்கப்பட்ட 07 கையடக்க தொலைபேசிகள் மற்றும் சுமார் 08 லட்ச ரூபா பெறுமதியான நவீன ரக மோட்டார் சைக்கிள் என்பனவும், பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

கைதுசெய்யப்பட்ட மூன்று சந்தேக நபர்களையும் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# அநுராதபுரத்தில் கோர விபத்து மூவர் சாவு; இருவர் படுகாயம்!



அனுராதபுரம் – பதெனிய வீதியில் இடம்பெற்ற விபத்தில் மூவர் உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்து நேற்று (திங்கட்கிழமை) காலை இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காரொன்று வீதியைவிட்டு விலகி மரத்தில் மோதி விபத்துக்குள்ளானதில் மூவர் உயிரிழந்துள்ளதுமையுடன், இருவர் காயமடைந்துள்ளனர் எனப்பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தின்போதுகாரில்ஐந்துபேர்பயணித்துள்ளனர் எனவும் விபத்தில், காயமடைந்தவர்கள் குருநாகல் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.



# அத்தியாவசியப் பொருள்கள் சிலவற்றின் விலை குறைப்பு

## நூறு ரூபாவால் சரிந்தது சீனி

கொழும்பு, ஒக். 19

அத்தியாவசியப்பொருள்கள்சிலவற்றின்விலைகள் குறைக்கப்பட்டுள்ளன. எனினும், பால்மா விலைக் குறைப்பு தொடர்பில் எவ்வித தீர்மானமும் எடுக்கப்பட வில்லை.

– இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும், இன்றைய ஊடக சந்திப்பில் ஊடகவியலாளர் வினவிய கேள்வி யொன்றுக்குப் பதிலளிக்கும்போது அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அத்தியாவசிய உணவுப் பொருட்கள் தொடர்பில் நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்துரை யாடப்பட்டது. அதன்போது, சில அத்தியாவசியப் பொருள்களின் விலை சந்தையில் குறைவடைந்துள் ளது என்று வர்த்தக அமைச்சர் கூறினார்.

அதற்கமைய, பருப்பு கிலோ ஒன்றின் விலை 685 ரூபாவிலிருந்து 398 ரூபாவாகக் குறைவடைந்துள் ளது. நாட்டரிசி கிலோ ஒன்றின் விலை 220 ரூபாவி லிருந்து 165 ரூபாவாகவும், வெள்ளைப் பச்சையரிசி கிலோ ஒன்றின் விலை 210 ரூபாவிலிருந்து 160 ரூபா வாகவும், சீனி கிலோ ஒன்றின் விலை 375 ரூபாவிலி ருந்து 275 ரூபாவாகவும், கோதுமை மா கிலோவொன் றின் விலை 395 ரூபாவிலிருந்து 275 ரூபாவாகவும் குறைவடைந்துள்ளது என்று வர்த்தக அமைச்சர் குறிப் பிட்டார்.

எவ்வாறாயினும், பால்மா விலை குறைப்பு தொடர் பில் எவ்வித தீர்மானமும் எடுக்கப்படவில்லை. இந்த விலை குறைப்பு தொடர்பான சந்தை நிலைமைகளை தொடர்பில் வர்த்தக அமைச்சர் ஊடக சந்திப்பொன்றின் ஊடாக விளக்கமளிப்பார் – என்றார்.



# சுயதொழில் ஊக்குவிப்பு சந்தை மன்னாரில் திறப்பு


மன்னாரில் உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிக்கும் வகையில் மன்னார் பிரதேச செயலாளர் எம்.பிரதீப் வழிநடத்தலின் கீழ் பிரதேச செயலக முன் வளாகத்தில் உள்ளூர் உற்பத்திகளுக்கான விற்பனைச் சந்தை நேற்று (திங்கட் கிழமை) காலை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த உள்ளூர் உற்பத்தி சந்தையை மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் ஏ .ஸ்டான்லி டிமெல் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்தார்.

குறித்த சுய தொழில் ஊக்குவிப்பு சந்தையில் மன்னாரில் உள்ள உள்ளூர் உற்பத்தியாளர்கள் தங்கள் உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்து வரு கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



STUDY IN INDIA - TAMILNADU
ADMISSIONS OPEN 2022 - 2023
For more details
Call: 076 817 0077 / 021 492 7780
ENGINEERING [B.E. / B.Tech]
AERONAUTICAL ENGINEERING
CIVIL ENGINEERING
MECHNICAL ENGINEERING
INFORMATION TECHNOLOGY
COMPUTER SCIENCE ENGINEERING
ELECTRONICS & COMMUNICATION ENGG.
UGC Recognized University Awarded Degree
A+ NAAC
SRET
Excel™
TAMILNADU, INDIA
COMMERCE
B.Com. | B.Com-CA
B.B.A. | B.Com. (AF)
SCIENCE B.Sc.,
Information Technology
B.C.A. | Computer Science
Mathematics | Physics
Microbiology | Bio-chemistry
ARTS
B.A. English, Tamil
Textile & Fashion Designing | Vis.com.
Costume Design & Fashion
POLYTECHNIC
Eligible with O/L
AUTO | MECH
CIVIL | ECE | EEE
ADMISSION OFFICE
Excel Lanka, 551A, Kasthuriyar Road, Jaffna. ( Near Jaffna Hindu Primary School)



# கிளிநொச்சியில்
# ஐஸ்வர்யம்
# பெருவிருந்து மண்டபம்
# Ishwaryam Banquet Hall



Tel:- 021 228 3701, 071 7354308

Whatsapp:- 071 7736 4308

No.315, Kandy Road,
Kilinochchi



- அன்பான வரவேற்பு
- தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
- இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
- இந்தியன் உணவுவகைகள்
- Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.

சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்

# ISHWARYAM BANQUET HALL
## BANQUET MEALS HALL





## FULL OPTION

**MAIN DIHES**

Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style

**DESSERT**

| | |
|---|---|
| ice Cream Cup | - 60/= |
| Fruit Salad | - 60/= |
| I ce Cream & Fruit Salad | - 100/= |
| Cream Caramel | - 120/= |

**SPECIAL MENU PACKAGE**

**BEVERAGES**

| | |
|---|---|
| jUICE 200 ml | - 70/= |
| Milk Drink | - 70/= |
| Cocacola M | - 70/= |
| Pepsi M | - 70/= |
| Swchpees Tin | - 250/= |
| Coca Cola Tin | - 250/= |

# எதிர்காலத்தில் மலேசிய வேலைவாய்ப்பு மலையக இளைஞர்களுக்கு முன்னுரிமை!

எதிர்காலத்தில் மலேசிய வேலை வாய்ப்புக்களுக்கு மலையகத்தில் உள்ள படித்த இளைஞர்களுக்கு முன்னுரிமை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக மலேசிய உயர் ஸ்தானிகர் டடோ டன் யங் தாய் தெரிவித்துள்ளார்.

அகில இலங்கை கிறிஸ்தவ அபிவிருத்தி ஒன்றியத்தின் தலைவரும் சர்வதேச இசைக் கல்விக்கான பயிற்சி நிலையத்தின் இலங்கைத் தூதுவருமான அதி வணக்கத்துக்குரிய பிதா அருட்கலாநிதி எஸ். சந்துரு பெர்னாண்டோ இலங்கைக்கான மலேசிய உயர் ஸ்தானிகர் டடோ டன் யங் தாயை திங்கட்கிழமை அவரது உத்தி யோகபூர்வ இல்லத்தில் சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இலங்கையில் 2019 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஈஸ்டர் தாக்குதல் தனக்கு மிகவும் வருத்தமளிப்பதாகவும் அப்பாவி மக்கள் மீது தாக்குதல் மேற்கொள்ள மறைமுகமாக செயற்பட்ட குற்றவாளிகள் கட்டாயம் தண்டிக்கப்பட வேண்டும் எனவும் உயர்ஸ்தானிகர் தெரிவித் துள்ளார்.

அதிவணக்கத்திற்குரிய பிதா அருட் கலாநிதி எஸ். சந்துரு பெர்னாண்டோவின் வேண்டுகோளின் பேரில் எதிர்வரும் காலங்களில் மலையக இளைஞர்களுக்கு அதிகமான மலேசிய வேலைவாய்ப்புக்களை பெற்றுக் கொடுப்பதற்கான ஏற்பாடுகளை தான் முன்னெடுப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.



# கொழும்பு தாமரைக் கோபுரத்தை பார்வையிடும் நேரத்தில் மாற்றம்!

கொழும்பு, ஒக். 19

கொழும்பு தாமரை கோபுரத்தை பொது மக்கள் பார்வையிடும் நேரத்தை கொழும்பு தாமரை கோபுர முகாமைத்துவ நிறுவனம் மாற்றியுள்ளது.

அதன்படி, திங்கட்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரை நுழைவுச்சீட்டுக்கள் விற்பனை செய்யப்படும் என்றும் பொது மக்கள் இரவு 10 மணி வரை கோபுரத்தை பார்வையிடலாம் என்றும் அந்த நிறுவனம் அறிவித்துள்ளது.

அதேநேரம், சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில், காலை 9 மணி முதல் இரவு 10 மணி வரை நுழைவுச்சீட்டுக்கள் விற்பனை செய்யப்படும் என்றும் பொதுமக்கள் தாமரை கோபுரத்தை இரவு 11 மணி வரை பார்வையிட அனுமதிக்கப்படுவார்கள் என்றும் அந்த நிறுவனம் அறிவித்துள்ளது.

பாடசாலை சிறுவர்களுக்கான சிறப்புச் சுற்றுலாக்கள் மற்றும் அரசு மற்றும் தனியார் நிறுவனங்களின் உத்தியோகபூர்வ வருகைகள் முன்கூட்டியே முன்பதிவு செய்யப்பட வேண்டும் என்றும் அந்த நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது.

# இலங்கை மாணவர்களுக்காக பெலாரஸ் அரசுடன் ஒப்பந்தம்!

இலங்கை மாணவர்களுக்கு உயர் கல்வி வாய்ப்புகளை வழங்கும் நோக்கத்தில் பெலாரஸ் அரசுடன் புரிந்துணர்வு ஒப் பந்தம் ஒன்றில் கைச்சாத்திடுவதற்கு இலங்கை கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

பெலாரஸ் நாட்டுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தின் போது கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவுடன் நடத்திய கலந்துரையாடலின் போதே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

இலங்கையிலிருந்து அதிகளவான மாணவர்கள் பெலாரஸ் பல்கலைக் கழகங்களில் இணைந்து உயர்கல்வியைத் தொடர்கின்றனர் என பெலாரஸ் கல்வி அமைச்சர் அன்ட்ரே இவானெட்ஸிடம் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

சமகால கல்வி முறைகளுக்கு ஏற்றவாறு இலங்கையில் பாடசாலை மற்றும் பல்கலைக்கழக பாடத்திட்டங்களை மேம்படுத்துவது தொடர்பான விடயங்களை அமைச்சர் பிரேமஜயந்த விளக்கினார்.

பெலாரஸ் நாட்டில் அதிகளவான இலங்கை மருத்துவ மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர் எனவும் கல்வியமைச்சர் நினைவூட்டியதுடன், இந்த மாணவர்களின் எதிர்கால நலன் தொடர்பாக விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன், இலங்கையின் கல்வி சீர்திருத்தங்களுக்கு தமது அரசாங்கம் பூரண ஆதரவை வழங்கும் என இதன் போது பெலாரஸ் கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பெலாரஸ் மற்றும் இலங்கை கல்வி அமைச்சுக்களுக்கு இடையில் கைச்சாத்திடப்படும் புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்பான வரைவு தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டது.

# இலங்கை எழுத்தாளருக்கு புக்கர் விருது கிடைத்தது!

இலங்கை எழுத்தாளர் ஷெஹான் கருணாதிலக்க எழுதிய "The Seven Moons of Maali Almeida" நூலுக்கு இம்முறை புக்கர் (Booker) விருது வழங்கப்பட்டுள்ளது.

ஷெஹான் கருணாதிலக்க எழுதிய இரண்டாவது புத்தகம் இது வென்பது குறிப்பிடத்தக்கது.




# தாமரை கோபுரம் திறக்கப்பட்டு ஒரு மாதத்தில் 9 கோடி ரூபா!

கொழும்பு, ஒக். 19

கொழும்பில் உள்ள தாமரை கோபுரத்தை கடந்த ஒரு மாதத்தில் ஒரு லட்சத்து 70 ஆயிரத்துக்கும் அதிகமானோர் பார்வையிட்டுள்ளனர்.

இதற்கமைய தாமரைக் கோபுரம் பொதுமக்களுக்கு கையளிக்கப்பட்டு ஒரு மாதம் நிறைவடைந்த நிலையில், ஒரு லட்சத்து 70 ஆயிரத்து 320 பேர் அதனை பார்வையிட்டுள்ளனர் எனக் கொழும்பு தாமரைக் கோபுரத்தின் முகாமை செய்யும் தனியார் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதன்மூலம் கடந்த மாதத்தில் முழுமையாக 9 கோடி ரூபா வருமானம் ஈட்டப்பட்டுள்ளதாக அதன் நிறைவேற்று அதிகாரி ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் பிரசாத் சமரசிங்க குறிப்பிட்டுள்ளார்.



# நுகேகொடையில் மூன்று பஸ்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்து!

நுகேகொடை சந்தியில் நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை 03 பஸ்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக் குள்ளாகியுள்ளன.

நேற்று காலை 6 மணியளவில் கோட்டையில் இருந்து பயணித்த தனியார் பஸ், நுகேகொடை சந்தியில் விளக்குகளை அலட்சியப்படுத்தியதன் காரணமாக மேலும் இரு பஸ்களுடன் மோதியதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் காயமடைந்த பஸ் சாரதி களுபோவில வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அதேநேரம், விபத்தை ஏற்படுத்திய மற்றொரு பஸ்ஸின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# பல மில்லியன் ரூபாக்களை செலுத்தாதமையால் ரூபவாஹினி கூட்டுத்தாபன மின்சாரம் துண்டிப்பு!

கொழும்பு, ஒக். 19

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் மின்கட்டணம் பல மில்லியன் ரூபா வரையில் அதிகரித்துள்ள நிலை யில், இலங்கை ரூபவாஹினி கூட்டுத் தாபனத்துக்கான மின்சார விநியோகம் இலங்கை மின்சார சபையால் துண்டிக்கப்பட்டுள்ளது.

ரூபவாஹினி கூட்டுத்தாபனத்துக்கான மின்சார விநியோகத்தை இலங்கை மின்சார சபை அதிகாரிகள் குழுவொன்று திங்கட்கிழமை காலை துண்டித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பல மில்லியன் ரூபா வரையில் மின் கட்டணம் அதிகரித்துள்ள நிலையில், அதனை இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் செலுத்தாத காரணத்தால் இவ்வாறு மின்சார விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக் கப்படுகிறது.

இந்நிலையில், தற்போது மாற்று எரிசக்தி ஆதாரங்களைப் பயன்படுத்தி, ஒளிபரப்பு சேவை முன்னெடுக் கப்படுவதாகவும் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபன அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மேலும், இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபன அதிகாரிகள் மின்சார சபையுடன் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்துக்கான மின்சார விநியோகத்தை மீட்பதற்கான பேச்சில் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

# யாழில் வேலை வாய்ப்புக்களுக்காக 19 ஆயிரம் இளையோர் காத்திருப்பு!

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 19 ஆயிரத்து 147 இற்கு மேற்பட்ட இளைஞர், யுவதிகள் தொழில் தேடுபவர்களாக யாழ். மாவட்ட செயலக மனித வலு வேலை வாய்ப்புத் திணைக்களத்தில் பதிவை மேற்கொண்டுள்ளனர் என யாழ் மாவட்ட செயலர் க.மகேசன் தெரிவித்தார்.

மாவட்ட செயலகத்தில் ஊடகவியலாளர்களை சந்தித்த போதே அவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில் –

யாழ்.மாவட்டத்தில் வேலையில்லா பிரச்சினை தேசிய மட்ட வேலையில்லாப் பிரச்சினைகளைப் பார்க்க அதிக உயர்வாக காணப்படுகின்றது, 21 வீதமானவர்கள் வடக்கு மாகாணத்தில் வேலையற்றவர் களாக உள்ளனர் என மத்திய வங்கியின் வருடாந்தத் தகவல் தெரிவிக்கின்றன.

யாழில் கடந்த வருடம் 7.5 வீதமாக காணப்பட்ட வேலையற்றோர் வீதம் தேசிய மட்டத்தில் 4.5 வீதமாக காணப்பட்டது. எனினும் கடந்த வருடத்தை விட இந்த வருடம் வேலையற்றோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும் தெரிவித்தார்,

காலைக்கதிர்
Kalaikkathir

**இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.**

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## மஹிந்தவின் ஜனாதிபதித் தேர்தல்



- செல்லத்துரை ரவீந்திரன் -

அங்கம் - 154

ஜனாதிபதித் தேர்தல் 19 நவம்பர் 2005 இல் நடந்தது. அதற்கான பிரசாரங்களில் மஹிந்தவுக்கு ஆதரவு தந்த பேரினவாத தேசியவாத கட்சிகள், நோர்வே அனுசரணையுடனான பேச்சு வார்த்தைகளை பெருவாரியாகத் தாக்கிப் பேசினாலும், மஹிந்த இடையிடையே அவை பற்றி, முக்கியமாகப் போர் நிறுத்த ஒப்பந்தக் கண்காணிப்பு குழு, சொல்ஹெய்ம் பற்றி நறுக்காக சிலவற்றை பல இடங்களில் பேசியமையோடு சரி. தான் விடுதலைப்புலிகளுடன் பேச்சு வார்த்தைகளைத் தொடருவார் என்றும், ஆனால் அது தங்களது நிபந்தனையின் அடிப்படையிலேயே என்ற தொனியுடன், சமா



விக்டர் ஐவன்

தானம் நிச்சயமாக நாட்டு மக்கள் யாவருக்கும் தேவை, ஆனால் அது கௌரவமானதாகவும் இருக்க வேண்டும், அப்படியான கௌரவமான சமாதானத்தையே தான் நாடுவார் என்ற சமாதான பிம்பத்தை தேர்தலில் கடைப்பிடித்தார்.

அவர் தனிப்பட்ட ரீதியில் நோவே அனுசரணையாளர்களுக்குத் தான் பதவிக்கு வந்தால் சமஷ்டி அமைப்பைப் பரிசீலிக்க தயார் என்ற உத்தரவாதங்களையும் தந்தாரெனக் கூறப்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிநிதியாகத் தேர்தலில் நின்ற ரணில் விக்கிரமசிங்க கட்சியின் பெரும்பான்மை வாக்குகளுடன் சிறுபான்மை மக்களின் சரளமான ஆதரவுடன் 48 வீத வாக்குகளைப் பெற்றார். பேரினவாத சிங்கள வாக்குகள் மஹிந்தவை ஆதரித்தன என்பது தெளிவாக இருந்தது. அப்படியும் அவர் பெற்றது 50 வீத வாக்குகள் மட்டுமே. இரண்டு வீதத்திற்கும் குறைவான வாக்குகளாலேயே மஹிந்தா பதவிக்கு வந்தார். அது



உயங்கொட

விடுதலை புலிகள் வடகிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்கள் வாக்களிப்பைப் பகிஷ்கரிக்க வேண்டும் என்று கட்டளையிட்டு, அதனை அமுல்படுத்தியது, முக்கியமான வினையைத் தந்தது.

தேர்தலின் சில நாள்களுக்கு முன் மஹிந்த அவரது பிரச்சார மேடைகளில் தனது பதவிக்காலத்தில் நாட்டை பிடித்திருக்கும் தீவிர பௌத்தத்தையும் சிங்கள தேசியத்தையும் பயன்படுத்தி எல்லா மக்களையும் இணைத்துக் கொண்டு செல்கின்ற பாதையை முன்னெடுப்பேன் என்று அறிவித்தார். விடுதலைப் புலிகளின் அந்த பகிஷ்கரிப்பு உதவியுடன் கூட ஆக இரண்டு வீத வாக்குகள் வித்தியாசத்தினால் மாத்திரமே மஹிந்த வெற்றி பெற்றார். அது பின்னர் பல கிசுகிசுகளுக்கு வித்திட்டது.

விடுதலைப் புலிகள் அப்படியான நடவடிக்கை எடுப்பதற்குக் காரணங்கள் தேடப்பட்டன. ஊடகங்கள் மூன்று காரணங்களை முன்வைத்தன.

அவற்றில் எல்லாம் முதலாவது பெரும் பரபரப்புப் படுத்தப்பட்டது. அது – ராஜபக்ஷக்கள் விடுதலைப் புலிகளுக்குப் பெருமளவு பணம் தந்து இந்தப் பரிஷ்கரிப்புக்கு ஒழுங்குகள் நடந்தன என்பது. தாங்களே பணத்தைக் கொண்டு சென்றோம், எப்படி அந்தப் பணம் அரச கணக்குகளில் இருந்து பெறப்பட்டு தரப்பட்டது என்றெல்லாம் புலனாய்வுக் கட்டுரைகளும் வலம் வந்தன.

இன்னுமொரு கோணத்தில் ரணில் தங்களைப் பேச்சு வார்த்தைகளில் நம்ப வைத்து, அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு சர்வதேச பொறிமுறை ஒன்றை ஆக்கி, அதில் தங்களைச் சிக்கவைத்து, வொஷிங்டன் சம்மேளனத்திற்கு அழைப்பு தராமல், தங்களை அவமதித்து நடத்தியதன் பிரதிபலனாக இதனைச் செய்தார்கள், அவரைத் தோல்வியைச் சந்திக்க வைக்க வேண்டும் என்ற வைராக்கியத்தின் போக்கு என்பது இவர்களது கருத்து.

இன்னும் ஒரு தரப்பு விடுதலைப் புலிகள் ரணிலிலும் பார்க்கக் கடும்போக்காளர் ஒருவரை தென்னிலங்கையில் பதவியில் அமர்த்த விரும்பினார்கள், அப்படியான கடும்போக்காளர் சிங்களப் பெரும்பான்மையின் சிந்தனைப் போக்குகளை மாற்றி, தீர்வு ஒன்று தேவை என ஆணித்தரமாக நிற்கலாம், அப்படியான நிலைப்பாட்டை கைக்கொள்ளாது அவர் போரைத் தான் தொடரப் போகிறார் என்றால், அவரைப் போன்ற கடும் போக்காளரை எதிர்கொள்வது சுலபம் எனப் புலிகள் கணக்குப் போட்டார்கள் என்று கருத்தாக்கம் செய்தது.

சில தரப்புகள் அந்த நாளகளில் விடுதலைப் புலிகள் எடுத்த இந்த உத்தியை தெளிவாக மதிப்பிட்டன. 'ராவய' இதழை நடத்திய முன்னைய ஜே.வி.பி. உறுப்பினர் விக்டர் ஐவன் இடதுசாரி புத்திஜீவிகளான ஜெயதேவ உயங்கொட, ஜயம்பதி விக்கிரமரத்தின போன்றோர் இது 'பக்குவமான' அரசியல் அல்ல, வளர்த்துக் கொண்டுவரப்பட்ட 'பயில்வான்' அரசியலின் இன்னுமொரு படிதான், தாங்கள் எதையும் சமாளிப்போம் என்ற வீராவேசத்தில் குஸ்திக் களத்தில் இருக்கும் பயில்வான் இன்னு



மஹிந்த

மொரு பயில்வானைத் தூண்டி இழுத்து விட்டுள்ளார் என அபிப்பிராயப்பட்டார்கள் என்று ஊடகவியலாளராகவும் இருந்த மனோரஞ்சன் தனது செவ்வியில் தெரிவித்தார்.

கடைசியில் பயில்வான் பெரிய பயில்வானைச் சந்தித்த கதையாகத்தான் விடயம் முடிந்தது.

விடுதலைப் புலிகள் அந்தப் பகிஷ்கரிப்பை எந்த நோக்கங்களைக் கொண்டு செய்து வினையைத் தேடிக் கொண்டார்கள் என்பதற்கு தகுந்த ஆதாரங்கள் பெறப்படவில்லை. கிடைத்தவை வெறும் ஊகங்களும், விளைவுகளும், உதாரணங்களும் ஆகின்றன. அவற்றை நடத்தியவர்களுக்குத்தான் அது வெளிச்சம்.

மஹிந்தாவின் தேர்தல் வெற்றியின் பின் மஹிந்தவின் குடும்பத்தவரை நன்கு அறிந்த நம்பிக்கையானவர்களிமிருந்து நோர்வே தரப்பினருக்கு வந்த தகவல்களால் மஹிந்தவுக்கு நோர்வையை ஒட்டி நல்லெண்ணங்கள் இல்லை, நோர்வேத் தராப்பினர் தேர்தலில் ரணிலுக்கு ஆதரவாக செயற்பட்டார்கள் என அபிப்பிராயங்கள்தான் அவற்றுக்கு காரணம் என்பன போன்ற செய்திகள் வந்தன.

மஹிந்ததைப் பற்றி நோர்வேயின் வெளி விவகாரத் தரப்புகளிடமும் நல்லெண்ணமோ மதிப்போ இருக்கவில்லை. தருணத்துக்கு ஏற்றபடி பேசி, அதற்காகக் காரியம் ஆற்றுபவர், ஒரு தொலைநோக்கோ அந்தத் தொலைநோக்குக்கான பார்வையோ அவரிடம் இல்லை என்பது




ஜயம்பதி

அவர்கள் கணக்கெடுப்பு.

நோர்வே தொடர்ந்தும் பேச்சு வார்த்தைகளில் ஈடுபட வேண்டுமா என்பதை மஹிந்தவிடம் நேரடியாக அறிந்து கொள்ள முயன்றாலும் அது பஸில் ராஜபக்ஷவிடம் தரப்பட்டு, அவர் சொல்ஹெய்முடன் நடத்திய சந்திப்பில் பேச்சுவார்த்தைகளை நோர்வே தொடர்ந்து முன்னெடுப்பதைத் தங்கள் அரசு விரும்புகின்றது என்ற உறுதிமொழியும், சமஷ்டி அமைப்பு முறையில் தீர்வை நோக்கிப் போகலாம் எனவும் ஏற்றுக்கொள்ளப்பட்டது .

விடுதலைப் புலிகளை அவர்களது நோக்கம் பற்றி சந்திக்கப் போகும் முன் மீண்டும் செய்த முயற்சியில், மஹிந்த சொல்ஹெய்மிடம் தான் தனது வெற்றிக்குப் பிரபாகரனுக்கு நன்றி சொல்வதாகத் தெரிவியுங்கள் எனக் கூறினார் என சொல்ஹெய்ம் நோர்வே வெளி விவகார அமைச்சினரோடு பகிர்ந்த போது குறிப்பிட்டார். அதேபோல அதனை பிரபாகரனிடமும் சொல்ஹெய்ம் தெரிவித்தார் எனவும், அதைப்பற்றி அவர் (பிரபாகரன்) எதுவும் பேசவில்லை என்றும் நோர்வே தொடர்ந்தும் பேச்சு வார்த்தைகளில் அக்கறை கொள்வதில் தங்களுக்கு பூரண சம்மதம் என்று தெரிவிக்கப்பட்டதாகக் கூறப்பட்டது.

(வளரும்...)



ரணில்

# இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்றால் அது இலங்கையின் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலே!

## புதுடில்லிக்கான தூதுவர் மிலிந்த மொறகொட விவரிப்பு

இந்தியாவின் பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் இலங்கைக்கும் அச்சுறுத்தலாக அமையும். எனவே இந்தியாவின் நலன்களுக்கு பாதகமான வகையில் இலங்கை அதன் துறைமுகங்களை பயன்படுத்துவதற்கு அனுமதிக்காது என்று இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொறகொட தெரிவித்துள்ளார்.

அந்த வகையில் இந்திய அரசாங்கத் துடன் செய்து கொள்ளப்பட்ட பரஸ்பர உடன்படிக்கை மற்றும் புரிந்துணர்வுக்கிணங்க இலங்கை நாடு, இந்திய நலன்களுக்கு தீங்கு விளைவிக்கக் கூடிய எந்தவொரு முறையிலும் வெளிநாடொன்றால் தனது துறைமுகங்கள் பயன்படுத்தப்படுவதற்கு அனுமதிக்க மாட்டாது என்பதை மீள உறுதிப்படுத்துவதாகவும் அவர் கூறினார்.

'டைம்ஸ் ஒவ் இந்தியா' ஊடகத்துக்கு வழங்கிய நேர்காணலொன்றிலேயே உயர்ஸ்தானிகர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கடனில் சிக்கியுள்ள இலங்கையின் 'நிலையான' பொருளாதார மீட்சிக்கான திறவுகோல் இந்தியா என்று தெரிவித்துள்ள உயர்ஸ்தானிகர், மூலோபாய ரீதியாக ஜப்பான், இஸ்ரேல் மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகிய நாடுகளுடனும் இந்தியாவுடனும் முத்தரப்பு ஒத்துழைப்பு வாய்ப்புக்களை ஆராய்ந்து வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அதில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

இலங்கை, இந்தியாவுடன் பொருளாதார ஒருங்கிணைப்பை மேற்கொள்ள விரும்புகிறது. இது இலங்கை எதிர்கொள்ளும் கடன் நெருக்கடியிலிருந்து விரைவாக மீள்வதை உறுதி செய்யும். எமக்கு இந்தியாவுடன் தொடர்ந்தும் இணைந்து பயணிக்க முடிந்தால், அதனுடன் நாமும் முன்னேறிச் செல்லலாம்.



இந்தியாவுடனான பொருளாதார ஒருங்கிணைப்பு மேற்கொள்ளப்பட்டால் , அதனுடன் புவிசார் அரசியல் பிரச்சினைகள் தானாகவே தீர்க்கப்படும். அதுவரை நாம் நிச்சயமாகப் பேச்சு வார்த்தைகளைத் தொடர வேண்டும். புரிந்துணர்வை வளர்த்து, நாம் சிவப்புக் கோடுகளைத் தாண்டவில்லை என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

எமது அடிப்படை பாதுகாப்பு கொள்கை என்னவென்றால், இந்தியாவிற்கு ஏற்படும் பாதுகாப்பு அச்சுறுத்தல் எமக்கும் பாதுகாப்பு அச்சுறுத்தலாகவே அமையும் என்று நாங்கள் நம்புகிறோம். மேலும் இந்தியாவும் இந்த நிலைப்பாட்டில் எம்முடன் இணங்கும் என்று கருதுகிறோம்.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் கீழ் தமிழர் பிரச்சினையில் இலங்கை தனது உறுதிமொழியை நிறைவேற்றப் போதுமான நடவடிக்கைகளை முன்னெடுக்கவில்லை என்று , ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இந்தியா கூறியதில் புதிதாக எதுவும் இல்லை.

இந்தக் கருத்தியல் வேறுபாடு மாறியிருக்கலாம். ஆனால் இந்தியா அதன் குறிப்பிட்ட பகுதி குறித்து மிகவும் உறுதியாகவுள்ளது. அரசியல் ரீதியில் இலங்கை ஒரு நிலையிலிருந்து பிறிதொரு நிலைக்கு மாறும் கட்டத்தில் உள்ளது. இந்த நாட்டின் சமூக மற்றும் பொருளாதார இணக்கப்பாடு தொடர்பில் பேச்சு வார்த்தையொன்றுக்கான தேவைப்பாடு உள்ளது. பல மதங்களும் இனங்களும் வாழும் சிக்கலான ஒரு நாடாக இலங்கை உள்ளது. இதன் கீழேயே 13 ஆவது திருத்தம் என்ற இந்தப் பிரச்சினையும் வருகிறது. நாம் புதிய உடன்படிக்கையொன்றுக்கு பணியாற்ற வேண்டியுள்ளது.

சுற்றுலா, மின்சாரம், பெற்றோலியம் மற்றும் தொலைத்தொடர்பு போன்ற துறைகளில் இந்தியாவுடன் ஒத்துழைப்பை தீவிரப்படுத்த இலங்கை விரும்புகிறது. நிலையான மீட்சி முக்கியமானது. இந்தியப் பொருளாதாரத்துடன் நாம் ஒருங்கிணைக்கக்கூடிய வழிகளை ஆராய விரும்புகிறோம். இந்தியப் பொருளாதாரத்துடன் இணங்கி செயற்பட்டால் நாம் மிக வேகமாக வளர்ச்சியடைய முடியும். - என்றார்.

# நானூறு இந்திய உற்பத்திப் பொருள்களின் ஏற்றுமதியை அதிகரிக்க உலகளாவிய குறியீட்டு ('பிராண்டிங்') முயற்சி

*பனாரசி சர்தோசி, கிர் கேசர் மாம்பழம், ஃபிரோசாபாத் கிளாஸ், காஞ்சிபுரம் பட்டு, காங்க்ரா ஓவியங்கள் மற்றும் அரக்கு பள்ளத்தாக்கு அரேபிகா காபி உள்ளிட்ட சுமார் 400 தயாரிப்புகள் தொடர்பில் இந்தியா தனது ஏற்றுமதியை அதிகரிக்க உலகளவில் விளம்பரப்படுத்த முற்படுவதால், அவை உலகளாவிய வர்த்தக முத்திரையைப் பெற உள்ளன.*

*தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தகத்தை மேம்படுத்துவதற்கான துறை (DPIIT) திட்டத்தின் ஒரு பகுதியாக புவியியல் குறியீடுகளுடன் (GI) குறியிடப்பட்ட தயாரிப்புகளுக்கான சாலைக் காட்சிகள், கார் காட்சிகள், தயாரிப்பு விளக்கங்கள் மற்றும் இலவச தயாரிப்பு சோதனைகளை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.*

*இது புவியியல் குறியீடுகளுடனான தயாரிப்புகளின் ஏற்றுமதித் திறனை ஆராய்வதற்கான ஒரு பெரிய திட்டத்தின் ஒரு பகுதியாகும் என்று ஒரு அரசாங்க அதிகாரி எக்கனமிக்ஸ் ரைம்ஸிடம் கூறினார்.*



*ஜூலை வரை, 420 தயாரிப்புகளுக்கு புவியியல் குறியீட்டுப் பதிவு வழங்கப்பட்டது, அதில் சுமார் 150 புவியியல் குறியிடப்பட்ட தயாரிப்புகள் விவசாயம் மற்றும் உணவுப் பொருள்கள். எஞ்சியவற்றில் கிட்டத்தட்ட 240 கைவினைப்பொருள்கள் மற்றும் கைத்தறி.*

*தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தகத்தை மேம்படுத்துவதற்கான துறை இவற்றை ஒருமுகப்படுத்தப்பட்ட முறையில் விளம்பரப்படுத்த விரும்புகிறது. அத்துடன் அவற்றின் ஏற்றுமதிக்கு மிகவும் தேவையான ஆதரவை வழங்குவதற்காக 'ஒரு மாவட்டம் ஒரு தயாரிப்பு' திட்டத்தின் வரிசையில் ஒரு விரிவான ஒழுங்கமைப்பு ஏற்பாடு வரையப்பட்டு வருகிறது.*

*இந்தியப் புவியியல் குறியீட்டு தயாரிப்புகளுக்கான பிரீமியம் பிராண்டை உருவாக்கவும், அவை சேர்ந்த புவியியல் பகுதியுடன் தொடர்புடைய முக்கியப் பொருள்களாக அவற்றை விளம்பரப் படுத்தவும் புவியியல் குறியீட்டு தினம், புவியியல் குறியீட்டு கண்காட்சி மற்றும் புவியியல் குறியீட்டு விழிப்புணர்வு பிரச்சாரம் ஆகியவை பற்றியும் விவாதிக்கப்படுகின்றன.*

*நாகாலாந்தில் இருந்து நாகா மிர்ச்சா (கிங் மிளகாய்), மணிப்பூரில் இருந்து கறுப்பு அரிசி மற்றும் அஸ்ஸாம் எலுமிச்சை, இங்கிலாந்துக்கு மூன்று புவியியல் குறியீட்டு வகை மாம்பழங்கள் (ஃபாஸ்லி, கிர்சாபதி மற்றும் லக்ஷ்மன் போக்) மேற்கு வங்காளத்திலிருந்தும், ஒரு புவியியல் குறியீட்டு வகை மாம்பழம் (சர்தாலு) ஆகியவற்றையும் பீகார் முதல் பஹ்ரைன் மற்றும் கத்தார் இந்தியா ஏற்றுமதி செய்துள்ளது.*

*தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தகத்தை மேம்படுத்துவதற்கான துறை ஆனது பொது வசதிக் கட்டமைப்புத் திட்டத்திற்கான தொழில்முறை ஏஜென்ஸிகளையும், பிரபலங்கள் மற்றும் புகழ்பெற்ற நபர்களின் பிராண்ட் தூதர்கள் மற்றும் செல்வாக்கு செலுத்துபவர்களையும் இணைக்கவும் திட்டமிட்டுள்ளது.*

**(மூலம்: 'த எக்கனமிக்ஸ் ரைம்ஸ்')**

## சித்த மருத்தவ கற்கை நெறி ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்து தனித்துவமாக செயற்படுவதே ஆரோக்கியமானது எனவும் வலியுறுத்தியுள்ளார்.

சுதேச மருத்தவம் தொடர்பான சட்ட ஒழுங்குகளில் கால மாற்றத்திற்கு தேவையான திருத்தங்களை மேற்கொள்ளும் வகையில் 8 திருத்தச் சட்ட மூலங்கள் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

அவற்றுள் ஒரு திருத்தச் சட்டமூலம், கொழும்பு பல்கலைக் கழகத்தில் சுதேச மருத்து கற்கை நெறிகளுக்கான பிரதான நிறுவனம் ஒன்றை ஸ்தாபித்து, அதன் கீழ் யாழ் மற்றும் கிழக்கு பல்கலைக் கழகங்களின் கீழ் செயற்படுகின்ற சுதேச மருத்துவ கற்கை நெறிகள் பிரிவு உட்பட பல்வேறு பிரதேசங்களிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற சுதேச மருத்துவ கற்கை நெறி நிறுவனங்களையும் உள்ளடக்கி செயற்படுத்தும் நோக்கில் முன்மொழியப்பட்டிருந்தது.

இந்தச் சட்டமூலம் தொடர்பாக தன்னுடைய ஆட்சேபனையை அமைச்சரவையில் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, சுதேச மருத்தவம் என்பது ஒவ்வொரு பிரதேசத்தின் சூழலமைவிற்கு ஏற்ப சில வித்தியாசங்களையும் வெவ்வேறான சிறப்புக்களையும் கொண்டிருப்பதால், அதனை கொழும்பை மையமாகக் கொண்ட கட்டமைப்பின் கீழ் கொண்டு வருவது ஆரோக்கியமாக இருக்காது எனவும் தெரிவித்தார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் இந்தக் கருத்தை ஏனைய சில அமைச்சர்களும் ஏற்றுக் கொண்ட நிலையில், இதுதொடர்பான சட்ட திருத்த மூலத்தினை கைவிடுவதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

யாழ். பல்கலைக் கழகத்தின் சித்த மருத்துவக் கற்கை நெறி பிரிவை, சித்த மருத்துவ கற்கைகள் பீடமாக தரமுயர்த்துவதற்கான முயற்சிகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## யாழ்., கிழக்குப் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றைய கூட்டத்தின் அடிப்படையில் வடக்கு, கிழக்கு பல்கலைக்கழகத் தமிழ் மாணவர் ஒன்றியத்தின் தலைவராக கிழக்கு பல்கலைக்கழகத்தின் கலைகலாசார பீடத்தின் தலைவர் நி.தர்சன் தெரிவு செய்யப்பட்டார். செயலாளராக யாழ் பல்கலைக்கழகத்தின் மாணவர் ஒன்றிய தலைவர் அ.விஜயகுமாரும், பொருளாளராக யாழ் பல்கலைக்கழகத்தினை சேர்ந்த பிரதீபனும் ஊடக பேச்சாளராக யாழ் பல்கலைக்கத்தினை சேர்ந்த இ.தர்சனும் செயற்பாட்டு உறுப்பினராக கிழக்கு பல்கலைக்கழக மாணவி அனுஸ்திகவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

வடகிழக்கில் உள்ள பல்கலைக்கழகங்களில் உள்ள அனைத்து தமிழ் மாணவர்களையும் ஒன்றிணைத்து பல்வாய்ந்த ஓர் அமைப்பாக இதனை உருவாக்குவள்ளோம்,இது காலத்தின் கட்டாயம் கருதி உருவாக்கப்பட்டுள்ளது. இந்த நாட்டில் தமிழ் மக்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டுவரும் சூழ்நிலையிலேயே இந்த மாணவர் ஒன்றியம் உருவாக்கப்படுகிறது. தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் அனைத்து பிரச்சினைகளுக்கும் குரல் கொடுக்கும் வகையிலும் மாணவர்கள் நலன்சார்ந்த வகையிலான செயற்பாடுகளை இது முன்னெடுக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது.

## அமைச்சுப் பதவி ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதன்படி, நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, ரோஹித அபேகுணவர்தன, மஹிந்தானந்த அளுத்கமகே மற்றும் நாமல் ராஜ பக்ஷ ஆகியோருக்கே அமைச்சுப் பதவிகளை வழங்க ஜனாதிபதி மறுப்பு தெரிவித்தார் எனக் கூறப்படுகிறது.

இந்நிலைமையால் ஏனைய அமைச்சர்களின் பதவிப்பிரமாணம் மேலும் தாமதமாகும் என அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## நெடுங்கேணியில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நெடுங்கேணி, பகுதியில் வீட்டில் இருந்த 21வயது யுவதி ஒருவர் வீட்டுக்குள் இருந்து வெளியே வந்த போது துப்பாக்கி சூடு நடத்தப்பட்டுள்ளது. யுவதி சம்பவ இடத்திலேயே மரணமடைந்துள்ளார். நெடுங்கேணி, சிவா நகர் பகுதியைச் சேர்ந்த துரைராஜசிங்கம் பிரமிளா (21 வயது) என்ற யுவதியே மரணமடைந்தவராவார்.

நெடுங்கேணி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## கொக்கெய்னுடன் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுங்கப் பிரிவின் அதிகாரிகளால் நேற்றுக் கைது செய்யப்பட்டார் என சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது..

பிரேசிலில் இருந்து டோஹா, கட்டார் ஊடாக நாட்டிற்கு வந்த யுவதி ஒருவரின் சந்தேகத்திற்குரிய நடத்தை காரணமாக, அவரை விசேட சோதனைக்கு உட்படுத்திய போது, அவரது பயணப் பொதிகளில் பொதி செய்யப்பட்டிருந்த ஐந்து டின்களில் உணவுப்பொருள்கள் எனக்கூறி மறைத்து வைத்திருந்த போதைப் பொருள் கண்டு பிடிக்கப்பட்டதாக சுங்கப்பிரிவு தெரிவித்துள்ளது.

## மாந்தை மேற்கில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விபத்தின் பின்னர் அவ்விடத்தில் இருந்து தலைமறைவாகி உள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில் உயிரிழந்தவர்களின் உறவினர்களும், பிரதேச மக்களும் விபத்து இடம்பெற்ற இடத்தில் முரண்பட்டமஒயாக், விபத்துடன் தொடர்புடைய பஸ்ஸைக் கொண்டு செல்வதில் சிக்கல் ஏற்பட்டது.

எனினும் பஸ் பின்னர் சம்பவ இடத்திலிருந்து பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு செல்லப்பட்டது.

## தும்பிக்கை துண்டாடப் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்பு திணைக்களத்தினரால் இனங் காணப்பட்டுள்ளது.

யானையின் தந்தத்தைக் கைப்பற்றும் நோக்கத்துடன் இந்த யானை கொல்லப்பட்டு இருக்கலாம் என வனஜீவராசிகள் திணைக்களத்தினர் சந்தேகிக்கின்றனர்.

இந்தச்சம்பவத்தில் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை. இது தொடர்பானமேலதிகவிசாரணைகளை முல்லைத்தீவு வனஜீவராசிகள் திணைக்களத்தினர் மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும், இது தொடர்பாக நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளார்கள்.

## கடலட்டை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ் ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அ.அன்னராசா இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் கூறயவை வருமாறு:-

படகுப் போக்குவரத்துக்கும் கடல் நீரோட்டத்திற்கும் குடாப்பரப்புகளில் அமைக்கப்படும் கடலட்டைப் பண்ணைகள் எமக்கு இடையூறாக இருக்கின்றன என்பதை எம்மால் நிரூபிக்க முடியும். தென்னந்தோப்பில் நின்று கொண்டு கடற்றொழில் அதிகாரிகள் கூறுவதை எம்மாலே ஏற்றுக் கொள்ள முடியாது.

கடலட்டை பண்ணையால் பாரம்பரிய மீனவர்கள் பாதிக்கப்படுவது தொடர்பாக நெக்டா திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் நிருபராஜ்க்கு நாம் மகஜரொன்றினை கையளித்திருந்தோம். இதுவரை அந்த மகஜருக்கு எந்தவித பதிலும் தரப்படவில்லை. இந்த நிலையில் நாம் ஊடகங்கள் வாயிலாக எமது கருத்துக்களை தெரிவிக்கின்றோம். அவற்றை வைத்து எம்மை அச்சுறுத்தலாம் என்றோ அடக்கலாம் என்றோ அதிகாரிகள் நினைப்பார்களேயானால் கடற்றொழில் சமூகம் வெகுண்டெழும் என்பதை தெரிவிக்கின்றோம். கடலட்டை பண்ணை தொடர்பாக நாங்கள் கூறும் கருத்து பொய்யானால் தென்னந் தோப்புக்குள் நின்று கதைக்காமல் பகிரங்கமாக ஊடகங்களுக்கு முன் விவாதத்துக்கு வாருங்கள்.

ஜம்பது வருடங்களுக்கு முன்பாகவே யாழ்ப்பாணத்தில் கடலட்டை பிடித்து பதப்படுத்தி வியாபாரம் செய்த உள்ளூர் வியாபாரிகள் இருக்கின்றார்கள். அதனால் கடற்சூழலுக்கோ கடற்றொழிலாளர்களுக்கோ எந்தவித பாதிப்பும் இல்லை. ஆனால் தற்போது கடலட்டை குஞ்சுகளை பிடித்து பண்ணை அமைத்து செயற்கையாக இனப்பெருக்கக்கம் செய்யலாம் என கூறுகிறீர்கள்.

இயற்கையாக கிடைக்கும் வளத்தை அளவோடு பெறமுடியும். அளவுக்கதிகமாக ஆசைப்பட்டு இயற்கை வளத்தையும் அழிப்பதாகவே முடியும்.

அண்மையில் தீவகப் பகுதிக்கு சென்ற கடற்றொழில் அமைச்சரிடம் பருத்தித்தீவில் அமைக்கப்படும் கடலட்டை பண்ணை தொடர்பாக பொதுமக்களால் கேள்வியெழுப்பப்பட்டது. இதன்போது நெக்டா உதவிப்பணிப்பாளரிடம் அந்தப் பண்ணை தொடர்பாக ஆய்வு செய்யுமாறு கடற்றொழில் அமைச்சரால் பணிக்கப்பட்டது.

பருத்தித்தீவு கடலட்டை பண்ணை யாருக்கு சொந்தம் எனவும் தெரியவில்லை. அதற்கு சட்ட ரீதியான அனுமதியும் வழங்கப்படவில்லை. அதிகாரிகளுக்கு துணிவு இருந்தால் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட பருத்தித்தீவு கடலட்டைப் பண்ணையை அகற்றுங்கள். அதை விடுத்து விட்டு துறைசார்ந்த அதிகாரிகளே எங்களை அச்சுறுத்துவதற்கு முயற்சிக்காதீர்கள். எங்களைக் கொன்றாலும் எங்கள் உயிர் இருக்கும் வரை எமது கடல்பகுதியில் நெக்டா நிறுவனத்தின் அனுமதியோடு சட்டவிரோதமாக இடம்பெறும் கடலட்டை பண்ணைகளுக்கு எதிராக குரல் கொடுப்போம். மிரட்டும் வரை மிரட்டுங்கள். சாவுக்கும் தயங்கமாட்டோம்.

சர்வதேசநாடுகளின் போட்டிக்கு வடக்கு கடற் பகுதி பலியாகின்றது. இந்தியாவாக இருக்கலாம், சீனாவாக இருக்கலாம், அமெரிக்காவாக இருக்கலாம் அதனை நிறுத்த வேண்டும். எந்த நாடுகளும் எமக்கு உதவி செய்வதாக இருந்தாலும் வடக்கு கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை பாதிக்காத வகையில் அந்த உதவியை செய்ய வேண்டும். நாம் வளர்ப்புத் திட்டத்தை நூறு வீதம் எதிர்க்கவில்லை. உள்ளூர் பொருளாதாரத்தை ஊக்குவித்துக் கொண்டு அதனைப் பாதிக்காத வகையில் வளர்ப்புத் திட்டத்தை மேற்கொள்ள வேண்டும் என்றே வலியுறுத்துகின்றோம். - என்றார்.

### இந்தியா பற்றிய வேதனை

இந்தியாவில் தடைசெய்யப்பட்ட கடலட்டை தொழிலுக்கு இலங்கையின் வட பகுதியில் இந்திய முதலீட்டாளர்கள் தொழில்நுட்ப உதவிகளை வழங்குவது கவலையளிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்திய அரசாங்கம் சுற்றுச்சூழலை கருத்திற்கொண்டு இந்தியாவில் கடலட்டை பிடிப்பதற்கும் வளர்ப்பதற்கும் தடைவிதித்துள்ளது.வ்ஆனால் கடந்தவாரம் மன்னார் ஓலைத்தொடுவாய் பகுதியிலுள்ள கடலட்டை உற்பத்திக் குஞ்சு நிலையத்தில் இந்திய முதலீட்டாளர்கள் தொழில்நுட்ப உதவிக்காக வருகை தந்துள்ளனர்.

இந்தியாவில் தடைசெய்யப்பட்ட கடலட்டை தொழிலுக்கு இலங்கையின் வடபகுதியில் இந்திய முதலீட்டாளர்கள் தொழில் நுட்ப உதவிகளை வழங்குவது கவலையளிக்கிறது. இந்தியாவில் தடைசெய்யப்பட்ட தொழில்நுட்ப முறைகளை இலங்கையின் வடபகுதியில் அமல்படுத்துவதை வடபகுதி மீனவர்கள் விரும்பவில்லை.

இந்திய அரசு மற்றும் இந்திய துணைத்தூதரகம் என்பன இதனைக் கருத்தில் கொண்டு கடலட்டை சார்ந்த தொழில்நுட்பங்களை அமுல்படுத்துவதை தவிர்க்க வேண்டும் . ஏனைய கடல்வாழ் உயிரினங்களின் வளர்ப்பு சார் தொழில் நுட்பங் களை அறிமுகப்படுத்தலாம். - என்றார்.

## முல்லைத்தீவு ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இணைப்பதற்கு சில முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

இதுதொடர்பாக அமைச்சரவையில் பிரஸ்தாபித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, சுமார் 70 வீதத்திற்கு மேற்பட்ட தமிழ் மக்கள் வாழுகின்ற இந்த கிராம சேவகர் பிரிவுகளை மகாவலி எல் வலயத்துடன் இணைப்பதற்கு எந்தவிதமான அவசியமும் இல்லை என்பதை தெளிவுபடுத்தியதுடன், இவ்வாறான செயற்பாடுகள் தமிழ் மக்கள் மத்தியில் நம்பிக்கையீனங்களை ஏற்படுத்தும் எனவும் எடுத்துரைத்தார்.

இந்நிலையில், குறித்த முயற்சிகள் நிறுத்தப்படும் என்று தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அதுதொடர்பான அறிவுறுத்தல்களையும் சம்பந்தப்பட்ட தரப்புக்களுக்கு வழங்கினார் எனத் தெரிவிக்கப்பட்டட்டது.

## திருநெல்வேலியில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பவ்ரல் அமைப்பின் மாற்றத்திற்கான பாதை கற்கை நெறியின் யாழ் மாவட்ட பெண்கள் குழு நடாத்தும் 'போதையினால் பாதை மாறும் இளையோரை நல்வழிப்படுத்தி நற்பிரஜைகளாக உருவாக்குவோம்' எனும் தொனிப்பொருளிலான போதை ஒழிப்பு விழிப்புணர்வு செயற்பாட்டு நிகழ்வு திருநெல்வேலி முத்து தம்பி இந்து மகா வித்தியாலயத்தில் இடம் பெற்றது. அதன் தொடர்ச்சியாக திருநெல்வேலி பொதுச் சந்தை முன்பாக கவனவீர்ப்பு முன்னெடுக்கப்பட்டது. இறை ஒட்டி வீதியோர ஆற்றுகையும் இடம்பெற்றது. உள்ளூராட்சி மன்ற பெண் பிரதிநிதிகள், பெண்கள் அமைப்பின் பிரதிநிதிகள் இதில் கலந்து கொண்டனர்.

## தேர்தல்களைப் பிற்போட ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்ட அவர், தேர்தலை முன்கூட்டியே நடத்துமாறு போராடியது எமது கட்சியாகும். தேர்தலைக் கோரி நீதிமன்றத்தை கூட நாடினோம். ஜனநாயகமே எமது கட்சியின் பிரதான நோக்கம்.

எனவே, தேர்தல்களை பிற்போட உடன்படமாட்டோம். அதனை பிற்போட வேண்டிய தேவையும் எமக்கு கிடையாது. ஏனெனில் வெற்றி என்பது எம் வசமே உள்ளது. எனத் தெரிவித்துள்ளார்.

## உள்ளூராட்சித் தேர்தல் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சட்டத்தின்படி அன்றைய தினத்திற்குள் அனைத்து உள்ளூராட்சி மன்றங்களும் புதிதாக அமைக்கப்பட வேண்டும் என ஆணைக்குழுவின் தலைவர் எஸ்.ஜி.புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

எனவே, 2023ஆம் ஆண்டு பெப்ரவரி மாத பிற்பகுதியில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த தேர்தல்கள் ஆணைக்குழு தற்காலிகமாக முடிவு செய்துள்ளதாக அவர் மேலும் கூறியுள்ளார்.

இந்த ஆண்டு பெப்ரவரி இறுதிக்குள் 18 வயதை பூர்த்தி செய்தவர்களை பட்டியலிடுவதன் மூலம் 2022 வாக்காளர் பதிவேட்டைஇந்தமாதஇறுதிக்குள்சான்றளிக்க தேர்தல்கள் ஆணைக்குழு எதிர்பார்த்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதன்பிறகு, செப்டம்பர் 30ஆம் திகதிக்குள் 18 வயது பூர்த்தியடைந்தவர்களின் பெயர்கள் அடங்கிய துணைப் பட்டியலைத் தயாரிக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எனவே, 2022 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பதிவேடு நவம்பர் நடுப்பகுதிக்குள் இறுதி செய்யப்படும் என்றும் இதன்மூலம் 2023 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு –
தொலைபேசி இலக்கம்
076 443 8622
kalaikkathiradvt@gmail.com

# இலங்கை முழுவதுமுள்ள வைத்தியசாலைகளுக்கு மருத்துவ உபகரணங்களை அமெரிக்கா நன்கொடை

நாடெங்கிலும் உள்ள இலங்கையர் களின் அவசர மருத்துவ தேவைகளுக்கு உதவியளிக்கும் நிமித்தம் அமெரிக்க பாதுகாப்பு திணைக்களத்தால் சுகாதார அமைச்சுக்கு நன்கொடையாக வழங்கப் படும் மருத்துவ உபகரணங்களை கையளிக்கும் நிகழ்வு பாணந்துறை தள வைத்தியசாலையில திங்கட்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்வில் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங், சுகாதார அமைச்சர் கலாநிதி கெஹெலிய ரம்புக்வெல்லவை சந்தித்ததன் பின்னர் கலந்துகொண்டார்.

நாடு முழுவதிலுமுள்ள வைத்திய சாலைகள் மற்றும் மருந்தகங்களின் மருத்துவ சேவைகளை மேம்படுத்தவுள்ள இந்த கருவிகளில் ஈ.சீ.ஜீ. இயந்திரங்கள், மல்ட்டிபரா மொனிட்டர்கள் , குறுநடுக்க நீக்கி , ஸ்பைனல் போர்ட்கள், உட்செலுத்தல் கருவிகள் மற்றும் ஒட்சிசன் சிலிண்டர்கள் என்பனவும் உள்ளடங்குகின்றன.

சுகாதார அமைச்சின் அதிகாரிகள், வைத்தியர்கள், தாதிமார் மற்றும் இந்த உபகரணங்களால் பயனடையவுள்ள வார்ட்டுகளிலுள்ள ஏனைய மருத்துவ பணியாளர்களையும் தூதுவர் சங் வைத்திய சாலையில் சந்தித்தார். இங்கு தூதுவர் தெரிவிக்கையில் –

அமெரிக்காவின் இந்த மருத்துவ உபகரணங்கள் நன்கொடையளிப்பு சவாலான காலத்தை எதிர்கொண்டுள்ள எமது நண்பனும் பங்காளியுமான இலங்கைக்கான எமது ஒத்துழைப்பை வெளிப்படுத்துகிறது. இந்த தேவைப் பொருள்களானவை, அதாவது, குறுநடுக்கத்தை நீக்கும் கருவி தற்போது இல்லாத வைத்தியசாலையொன்றுக்கு அந்த கருவியை வழங்குதல் மற்றும் இன்னுமொரு வைத்தியசாலையில் மாற்றம் செய்யப்பட வேண்டிய இரத்த அழுத்த அளவீட்டு கருவிகளுக்கு பதிலாக புதியவற்றை வழங்குதல் போன்றன, நாடு முழுவதிலுமுள்ள வீரமிக்க மருத்துவ சேவை வழங்குநர்கள் இலங்கையர்களுக்கு



மேலும் உயிர்காக்கும் சிகிச்சைகளை வழங்குவதற்கு உதவியாக அமையும்,' – என்றும் குறிப்பிட்டார்.

# கோட்டாபய ராஜபக்ஷ, மஹிந்தர், பஸில் ஆகியோரே பொருளாதாரப் பாதிப்புக்கு முன்னிலை பொறுப்பாளிகள்!

## நாலக கொடஹேவா காட்டம்

பொருளாதார நெருக்கடிக்கு தாம் காரணமல்லர் என்பதைக் காண்பிக்கும் வகையில் ஆளும் தரப்பினர் நாட்டை வலம் வருகிறார்கள்.

கோட்டாபய ராஜபக்ஷ,மஹிந்த ராஜபக்ஷ, பஸில் ராஜபக்ஷ, எஸ்.ஆர் ஆட்டிகல, லக்ஷ்மன் மற்றும் கப்ரால் ஆகியோர் பொருளாதாரப் பாதிப்புக்கு முதனிலை பொறுப்புதாரிகள்.

தமது குறைகளை மறைத்துக் கொள்ள பிறரை விமர்சிப்பது நகைப்புக்குரியதாகும் என நாடாளுமன்ற உறுப்பினர் நாலக கொடஹேவா தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

துறைசார் நிபுணர்களின் ஆலோசனையால் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பலவீனமடைந்தார் என ஆளும் தரப்பினர்கள் நாட்டை வலம் வந்து குறிப்பிட்டுக் கொள்கிறார்கள். நாவலபிடி நகரில் இடம்பெற்ற பொதுஜன பெரமுனவின் கட்சி கூட்டத்திலும் இவ்வாறு குறிப்பிடப்பட்டதை அவதானிக்க முடிந்தது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தில் விவசாயத் துறை அமைச்சு பதவி வகித்தவர் தான் கோட்டாபய ராஜபக்ஷவை இரசாயன உரம் மற்றும் சேதன பசளை விவகாரத்தில் தவறாக வழிநடத்தினார்.

இரசாயன உரத்தைத் தடை செய்து, ஒரே கட்டமாக சேதன பசளை திட்டத்தை செயற்படுத்த முடியாது என விவசாயத் துறை அமைச்சின் செயலாளர்கள் ஆலோசனை வழங்கிய போது விவசாயத்துறை அமைச்சர் அவர்களைப் பதவி விலக்கி, சேதனப் பசளைத் திட்டத்தை முன்னெடுத்துச் செல்ல முடியும் என ஜனாதிபதியைத் தவறாக வழிநடத்தினார். தற்போது இவர் பிறர் ஜனாதிபதியை ஏமாற்றினார்கள் எனக் குறிப்பிடுகின்றமை நகைப்புக்குரியது.

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு விரைவான தீர்வைக் காணாவிட்டால் நாட்டு மக்கள் மேலும் மிக மோசமான நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிடும்.

பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண்பதை விடுத்து அரசாங்கம் நெருக்கடிகளை மேலும் தீவிரப்படுத்தும் வகையில் செயற்படுவதைக் காண முடிகிறது.

வட்டி மற்றும் வரி வீதம் அதிகரிக்கப்பட்டுள்ளதால் சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் பாதிக்கப்படும் நிலை ஏற்படும். நாட்டில் பெரும்பாலான தொழிற்துறைகள் பாதிக்கப்பட்டுள்ளன. தொழில் முயற்சியாளர்களை மேம்படுத்தினால் மாத்திரமே பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண முடியும்.

பொருளாதார நெருக்கடிக்குத் தாம் காரணமல்லர், பிறர் தான் காரணம் எனக் காண்பிக்கும் வகையில் ஆளும் தரப்பினர் தற்போது நாட்டை வலம் வருகிறார்கள். ஜனாதிபதி, நிதியமைச்சர், மத்திய வங்கின் ஆளுநர் மற்றும் நிதியமைச்சின் செயலாளர்கள் ஆகியோர் பொருளாதார



நெருக்கடிக்குப் பொறுப்புக் கூற வேண்டும்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, முன்னாள் நிதியமைச்சர்களான மஹிந்த ராஜபக்ஷ, பஸில் ராஜபக்ஷ மற்றும் மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர்களான பேராசிரியர் லக்ஷ்மன், அஜித் நிவார்ட் கப்ரால் மற்றும் நிதியமைச்சின் முன்னாள் செயலாளர் எஸ். ஆர். ஆடிகல ஆகியோர் முதனிலை பொறுப்புக் கூற வேண்டும்.பொறுப்புக் கூற வேண்டியவர்கள் அரசியல் இலாபத்துக்காக தப்பித்துக் கொள்வதற்காக பிறரைக் குற்றஞ்சாட்டிக் கொள்கிறார்கள். – என்றார்.

# புலம் பெயர்ந்தவர்களிடத்தில் காணப்படும் கலைகள் மீதான ஈடுபாடு இனத்தின் அடிப்படைகளை வலுப்படுத்துகின்றது!

## வலி.கிழக்கு பிரதேசசபைத் தவிசாளர் நிரோஷ் கருத்து





புலம்பெயர் தேசத்தில் கூட இனத்தின் அடையாளங்களைப் பேணுவதிலும் பாதுகாப்பதிலும் எமது மக்கள் மிகுந்த ஆர்வமுடையவர்களாக இருக்கின்றமை வரவேற்கத்தக்கது என வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

ஞாயிற்றுக்கிழமை மாலை கனடா ஸ்காபரோ கந்தசாமி ஆலய கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற கிறிபின் கல்லூரி திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் –

இலங்கையில் இனவாத ரீதியில் நாம் அடக்குமுறைகளுக்கும் ஒடுக்கு முறைகளுக்கும் உள்ளாக்கப்பட்டமையால் நாம் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர் களாகவும் வெளிநாட்டில் புலம் பெயர்ந்தவர்களாகவும் வாழ்ந்து வருகின்றோம்.

இவ்வாறாகப் புலம்பெயந்த நிலையிலும் எமது தலைமுறைகள் கல்வி ரீதியிலும் கலாசார ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் நிபுணத்துவ ரீதியிலும் சிறந்து விளங்குகின்றார்கள். நாங்கள் வசிக்கும் நாடுகளில் பல்கலாசாரத் தன்மையை மதிப்பவர்களாக மிளிர்கின்றோம்.

அடிப்படையில் ஓர் இனத்தின் இருப்பு என்பது அரசியலில் மாத்திரம் கட்டமைக்கப்பட்டதல்ல. இனத்தினுடைய அரசியல், சமூக, பொருளாதார, கலாசாரத்தை ஸ்திரமாகக் கொண்டு வாழ்வதில் தங்கியுள்ளது. இந்த இடத்தில் கனடாவில் புலம் பெயர்ந்து வாழக்கூடிய மாணவர்களின் கலை நிகழ்வுகளை இரசிக்க வாய்ப்புக் கிடைத்துள்ளது. இதில் தாய் மொழி மீதும் தாயகத்தின் மீதும் நீங்கள் கொண்டிருக்கும் பற்றை பறை சாற்றியிருந்தீர்கள்.

அடிப்படையில் தாயகத்தில் இருக்கும் நம்வர்கள் கொண்டிருக்கும் கலை ஆற்றல்களை ஒத்ததாக அதன் நீட்சியாக உங்கள் கலை ஆர்வம் உள்ளது. புலம்பெயர்ந்து வாழக்கூடிய புதிய தலைமுறைக்கும் தாயகத்தில் வாழக்கூடிய புதிய தலைமுறையினருக்கும் இடையில் உறவை வலுப்படுத்த வேண்டிய அவசியம் காணப்படுகின்றது.

இன்று உங்கள் தாய் தந்தையர் எவ்வளவு தூரம் தாயகத்தில் வாழும் தமது உறவினர்களுடன் உறவைக் கொண்டிருக்கின்றார்களோ அதை வலுப்படுத்தும் முகமாக புலம் பெயர் தேசத்திலேயே பிறந்து வாழக்கூடிய புதிய தலைமுறைகளிடத்தில் ஆக்கபூர்வமான வழிகாட்டுதல்களையும் ஒழுங்கு படுத்தல்களையும் நாம் மேற்கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

எமது கலைகள் இன ஒடுக்கு முறை ரீதியிலும் உலக மயமாக்கத்தின் அதிகரித்த தாக்கங்களாலும் கேள்விக்கு உள்ளாகக் கூடிய ஒரு சூழ்நிலையில் உங்கள் பற்றுறுதி தமிழ்க் கலைகள் என்றும் வாழும் என்ற உத்தரஷ்வாதத்தைத் தருகின்றது. இவ்வாறு வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.10.2022இல் வெளியிடப்பெற்றது.